சார்பு நீதிமன்றம், சங்ககிரி

MCOP.No.40/2018

ம.சா.2

நாள். 14.03. 2025.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சேகர் | மதம்: | இந்து |
| தகப்பனார்/கணவர் பெயர்: | முனியன் | ஜாதி: | --- |
| கிராமம்: | தேவண்ணகவுண்டனூர் | வேலை: | --- |
| வட்டம்: | சங்ககிரி | வயது: | --- |

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய ம.சா.2ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது பிரிவின் கீழ் திரு.திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் இம்மனுவில் 3ம் தரப்பினர். நான் மனுதாரர்கள் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக முதல் விசாரணை சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

இறந்து போன கோபி எங்கு யாரிடம் வேலை செய்தார் என்று எனக்கு நேரடியாக தெரியாது. விபத்தின் போது கோபிக்கு தலையில் காயமானது. தலைக்கவசம் அணியவில்லை என்பதால் தான் தலைக்காயமானது என்றால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்திய காரின் ஓட்டுநர் விபத்து நடந்த உடன் அங்கிருந்து ஓடிவிட்டார் என்றால் சரிதான். இறந்து போன கோபி என் ஊர்காரர். நான் மனுதாரர்களுக்கு ஒத்தாசை செய்வதற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சேகர்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.